**25 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**எழும்பூர், சென்னை – 08**

**முன்னிலை – திரு.** M. காளிமுத்துவேல், B.Sc., M.A., LLM.,
25 வது பெருநகர குற்றவியல் நடுவர்,
2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

STC. No.3697/2025
CNR.No. TNCHOF – 101981-2024

| | | |
|---|---|---|
| Complainant | :: | M. Ponnusamy,<br>S/o. N. Muthusamy (a) Maruthai<br>Rep. By his Power of Attorney Agent<br>S. Natarajan,<br>S/o. Subramaniyam,<br>No.12, Andal Nagar Extn., Adambakkam,<br>Chennai – 600 088. |
| Accused | :: | Mr. C.S. Rajamanickam<br>S/o. Late Mr. C. Sivasubramanian,<br>**Residence:**<br>Villa No.343, Pacifica Aurum Villas,<br>Padur, Chingleput District – 603 103.<br>**Office:**<br>Sri Housing Infra at<br>No.2/3, Rajiv Gandhi Salai – OMR,<br>First Floor, Near Sai Baba Temple,<br>Kelambakkam, Chennai – 603 103. |
| The period of remand of the accused | :: | NIL |
| The date of filing of the complaint/final report in the Court | :: | 04.12.2024 |
| The date of committal of the case to the Court of Session | :: | NIL |
| The date of questioning of the accused under Sec. 251 of Cr.Pc | :: | 29.04.2025 |

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:22:43 +0530

<table>
<tr><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under Sec.317 Cr.P.C</td><td>::</td><td>1. Crl.M.P.No.10011/2025 Dated 08.10.2025 – U/s. 348 of BNSS Petition – Allowed.<br>2. Crl.M.P.No.10010/2025 Dated 08.10.2025 – U/s. 145 (2) of N.I. Act Petition – Dismissed.</td></tr>
<tr><td>Date of Examination in-chief and cross-examination of witness</td><td>::</td><td><table><tr><th>Witneses</th><th>Name</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>PW1</td><td>Tr.Natarajan</td><td>29.04.2025</td><td>25.03.2026</td></tr></table></td></tr>
<tr><td>Date of Examination of the accused under Sec. 313 Cr.P.C</td><td>::</td><td>15.07.2025</td></tr>
<tr><td>Details of abscondence of an accused and appearance/ production, as the case may be;</td><td>::</td><td>NIL</td></tr>
<tr><td>Grant of stay by superior courts and the results time of</td><td>::</td><td>NIL</td></tr>
<tr><td>Offence</td><td>::</td><td>U/s.138 of N.I.Act</td></tr>
<tr><td>Accusation against accused</td><td>::</td><td>U/s.138 of N.I.Act</td></tr>
<tr><td>Plea of the Accused</td><td>::</td><td>Not Guilty</td></tr>
<tr><td>Finding</td><td>::</td><td>Found Not Guilty</td></tr>
<tr><td>Sentence</td><td>::</td><td>In the result, the offence against the accused under section 138 of Negotiable Instruments Act has not proved by the complainant beyond reasonable doubt and the accused is found not guilty of committing the offence under section 138 of Negotiable Instruments Act and the accused is acquitted under section 278(1) of BNSS</td></tr>
</table>

*****

இவ்வழக்கானது ஆரம்பத்தில் குற்றமுறையீட்டாளர் பெருநகர குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றம் I ல் தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கு கோப்பிற்கு

M KALIMUTHUVEL
Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:22:47 +0530

எடுக்கப்பட்டு பின்னிட்டு இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு கடந்த 15.07.2025 அன்று விசாரணைக்காக மாற்றப்பட்டு, கடந்த 24.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரனைக்காக வாய்தாவிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் எம்/எஸ்.வி.சௌந்தர்ராஜன், கே.முத்தரையன், ஜி.சிவராமகிருஷ்ணன், சி.தமிழ்செல்வன் என்பவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் எம்/எஸ்.எஸ்.திருகுமரன், வி.அர்ச்சனா என்பவர்கள் ஆஜராகியும், இறுதியாக என் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் எதிரி குற்றம் புரிந்து இருப்பதாகவும், எதிரிக்கு தண்டனை வழங்ககோரியும், BNSS பிரிவு 395 ன் கீழ் இழப்பீடும் வழங்க கோரியும் BNSS பிரிவு 223 ன் கீழ் தனிநபர் புகார் தாக்கல் செய்துள்ளார்.

### 1. குற்றமுறையீட்டாளரின் வழக்கின் சுருக்கம்:

i). இவ்வழக்கின் எதிரி புகார்தாரருக்குச் செலுத்த வேண்டிய தொகை தொடர்பாகச் சட்டப்படி அமல்படுத்தக்கூடிய பொறுப்பு தனக்கு உள்ளதை அவர் ஒப்புக்கொண்டதாகவும், அப்பொறுப்பை ஓரளவு நிறைவேற்றும் விதமாக, 02.11.2023 தேதியிட்ட தனது கடிதத்தின் படி, 18.09.2024 தேதியிட்ட காசோலைகள் எண்கள் முறையே 000783, 000784 என்ற எண்கள் கொண்ட ஐசிஐசிஐ பேங்க், அடையாறு கிளைக்குரிய காசோலைகள் முறையே ரூ.30,00,000/—த்திற்கு எதிரிக்கு இரண்டு காசோலைகள் வழங்கியதாகவும், புகார்தாரருக்குத் தொகை செலுத்த வேண்டியிருந்த தனது சகோதரி

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:22:51 +0530

மீனாட்சியிடமிருந்து தான் ஏற்றுக்கொண்ட கடனைத் தீர்ப்பதற்காக, எதிரி வழங்கிய காசோலைகளில் மேற்கூறிய இரண்டு காசோலைகளும் அடங்கும் என்றும், மேலும், 02.11.2023 தேதியிட்ட தனது கடிதத்தில் அக்குறிப்பிட்ட கடனுக்கான பொறுப்பைத் தெளிவாக ஒப்புக்கொண்டதன் மூலம், புகார்தாரருக்குச் செலுத்த வேண்டிய அத்தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காகவே இக்காசோலைகள் வழங்கப்பட்டதாகவும்,

ii). தனது அசையாச் சொத்து தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட அடமான ஆவணங்களின் அடிப்படையில் உள்ள கடனைப் பகுதியளவு தீர்ப்பதற்காகவே இந்தச் காசோலைகள் வழங்கப்பட்டதாகவும், அவை செல்லுபடியாகும் தன்மை கொண்டவை என்றும், பணமாக்குவதற்காக அவற்றைச் சமர்ப்பிக்கலாம் என்றும், காசோலைகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, மதுராந்தகம் அருகே உள்ள தனது சொத்து தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்மூலம் உருவாக்கப்பட்ட அடமானம் குறித்து 11.06.2024 அன்று அனுப்பப்பட்டிருந்த முன்னைய அறிவிப்பை ரத்து செய்வதாகவும், அதேவேளையில் பணமாக்குவதற்காக அக்காசோலைகளைச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாகவும், புகார்தாரர் தனது வழக்கறிஞர் வாயிலாக 28.08.2024 தேதியிட்ட அறிவிப்பு ஒன்றை அனுப்பியதாகவும்,

iii). இந்த அறிவிப்பு 31.08.2024 அன்று எதிரிக்கு முறையாகச் சார்வு செய்யப்பட்டதாகவும், இந்த அறிவிப்பின் மூலம், பணமாக்குவதற்காகக் காசோலைகள் சமர்ப்பிக்கப்படவிருப்பது குறித்த முழுமையான தகவல் எதிரிக்கு தெரிந்ததாகவும், மேற்படி காசோலைகளை புகார்தாரர் தனது வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது "போதிய பணமில்லை" என்ற காரணத்தினால் 19.09.20224 தேதியில் காசோலைகளுக்கு பணம் பட்டுவடா செய்யப்படாமல் மறுக்கப்பட்டு திருப்பபட்டதாகவும், இதுகுறித்து புகார்தாரர் எதிரிக்குக் காசோலைகளின்

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:22:58 +0530

தொகையைச் செலுத்தக்கோரி 16.10.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பைப் பெற்றுக்கொண்டதாகவும், அதன் பின்னிட்டு எதிரி காசோலைகளின் தொகையினை கொடுக்கவில்லை என்றும், எனவே, எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே, எதிரியைத் தண்டித்து BNSS பிரிவு 395 ன் கீழ் இழப்பீடு வழங்ககோரி இத்தனிநபர் குற்ற புகார் தாக்கல் செய்துள்ளதாக வாதிடப்பட்டுள்ளது.

**2.** இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் பெருநகர குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றம் I ல் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம் பெறப்பட்டு, ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜர் ஆன பிறகு எதிரிக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி எதிரியிடம் குற்றம் குறித்து வினவப்பட்டுள்ளது. பொய்வழக்கு மற்றும் குற்றவாளி இல்லை என மறுத்து எதிரி காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையொப்பங்கள் தன்னுடையது இல்லை என்றும், தான் பணம் எதுவும் வாங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

**3.** புகார்தாரர் தரப்பில் புகார்தாரரின் முகவர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பு.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடித்துவைக்கப்பட்டுள்ளது.

**4. புகார்தாரர் சாட்சியத்தின் சுருக்கம்:–**

i). புசா.1 சாட்சியத்தில் புகாரில் தெரிவித்துள்ள விவரங்கள் ஒத்தும் வலியுறுத்தியும் முதன்மை விசாரணை வாக்குமூலம் சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளார். பு.சா.1 சத்திய பிரமாண வாக்குமூலத்தில், 27.08.2024 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் பு.சா.ஆ.1 தாக்கல் செய்தும்,

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:05 +0530

புகார்தாரர் நிறுவனத்தில் கொடுத்த 02.11.2023 தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி அனுப்பிய கடிதம் பு.சா.ஆ.2 தாக்கல் செய்தும், 11.06.2023 தேதியிட்ட புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (அசல்) (பு.சா.ஆ.3) அனுப்பபட்டதாகவும், 22.07.2022 மற்றும் 25.07.2022 தேதிகளியிட்ட எதிரி புகார்தாரருக்கு எழுதி கொடுத்த இரண்டு அடமான பத்திரங்கள் (சான்றிட்ட உண்மை நகல்) பு.சா.ஆ.4 தாக்கல் செய்தும், 28.08.2024 தேதியிட்ட புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (அசல்) பு.சா.ஆ.5 தாக்கல் செய்தும், மேற்படி அறிவிப்பை எதிரி 31.08.2024 தேதியில் பெற்றுக்கொண்டதாகவும், அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.சா.ஆ.6 தாக்கல் செய்தும்,

ii). மேற்படி எதிரி புகார்தாரருக்கு தரவேண்டிய தொகையை திரும்ப செலுத்தும் பொருட்டு, 18.09.2024 தேதியிட்ட காசோலை எண்கள் முறையே 000783, 000784 என்ற எண்கள் கொண்ட "ஐசிஐசிஐ பேங்க்", அடையார், சென்னை தொகை ரூ.30,00,000/-த்திற்கு கிளைக்குரிய கசோலைகள் (பு.சா.ஆ.7) கொடுத்ததாகவும், மேற்படி காசோலைகளை புகார்தாரரின் வங்கியான "ஆக்ஸிஸ் பேங்க்", சென்னை, திருமங்கலம் கிளையில் 18.09.2024 தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது அந்த காசோலைகளானது போதிய பணமில்லை என்ற காரணத்தினால் 19.09.2024 தேதியில் (பு.சா.ஆ.8) திருப்பபட்டதாகவும், இது குறித்து உமக்கு 16.10.2024 தேதியிட்ட புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய காசோலைகள் மோசடி குறித்த சட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.9) அனுப்பியதாகவும், மேற்படி சட்ட அறிவிப்பை எதிரி 23.10.2024 பெற்றுக்கொண்டதாகவும், அதற்கான அஞ்சலக தேடுதல் அறிக்கை பு.சா.ஆ.10 தாக்கல் செய்தும், அதன் பிறகு புகார்தாரருக்கு எதிரி வழக்கு காசோலைகளுக்கான பணத்தை பட்டுவாடா செய்யாத காரணத்தினால் எதிரி

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:14 +0530

மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்து இருப்பதாக தண்டித்து வழக்கு காசோலைகள் இழப்பீட்டு தொகையாக வழங்க வேண்டுமென முதன்மை விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடித்துவைக்கப்பட்டுள்ளது.

**5.** புகார்தாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமான சாட்சியங்கள் குறித்து, BNSS பிரிவு 351(1)(ஆ) பிரிவின் படி எடுத்துக்கூறி வினவியபோது, எதிரி காசோலை கூடுதல் பொறுப்புறுதிக்காக கொடுக்கப்பட்டதாகவும், பணம் எதுவும் வாங்கவில்லை என்றும், சொத்து அடமானம் போடப்பட்டதாக தெரிவித்துள்ளார். எதிரி தரப்பில் எவ்வித சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

**6.** இருதரப்பு வாதங்களும் கேட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**7.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,

**1. இந்த வழக்கின் தாக்கல் செய்யப்பட்ட பு.சா.ஆ.7 காசோலைகள் சட்டபூர்வ கடனுக்காக வழங்கப்பட்டதா? புகார்தாரருக்கு ஆதரவாக மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 139 ன் கீழான அனுமானம் எடுத்துகொள்ளமுடியுமா?**

**2. எதிரி மாற்றுமுறை ஆவணம் சட்டம் பிரிவு 139 ன் கீழான அனுமானத்தை மறுத்தளித்துள்ளாரா?**

**3. புகார்தாரர் எதிரி மீதான குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பவைகள் ஆகும்.**

**8. 1 முதல் 3 பிரச்சனைகளுக்கான தீர்வு:-**

8(i). புகார்தாரர் தரப்பு ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்துள்ளார். அதில் தனது தரப்பில் எதிரி காசோலைகளில்

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:19 +0530

உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், காசோலைகள் புகார்தாரருக்கு கொடுத்ததாகவும் ஒத்துக்கொண்டுள்ளார். இந்நிலையில் மாற்றுமுறையாவாண சட்டம் பிரிவுகள் 118 மற்றும் 139 ன் கீழான அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாகவும், புகார்தாரர் காசோலைகள் 3 மாதத்திற்குள் வங்கியில் தாக்கல் செய்து காசோலைகள் திருப்பபட்ட விவரத்தை 30 நாட்களுக்குள் எதிரிக்கு தெரிவித்தும் எதிரி காசோலைகளுக்கான பணத்தை புகார்தாரருக்கு சட்ட அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் திருப்பி செலுத்தாத காரணத்தினால் 30 நாட்களுக்குள் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், எதிரி தன்னுடைய கடன் பொறுப்பை ஒத்துக்கொண்டு பு.சா.ஆ.2 வழங்கியிருப்பதாகவும், சட்டப்படியான கடனான அடமான கடனை திருப்பி செலுத்தும் பொருட்டு வழக்கு காசோலைகளை வழங்கியிருப்பதாகவும், எதிரி தரப்பில் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவுகள் 139 மற்றும் 118 ன் கீழான அனுமானங்களை மறுத்தளிக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரி தரப்பில் புகார்தாரரின் சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், எந்தவிதமான எதிர்வாதம் முன்வைத்து அதை நிரூபிக்கும் விதத்தில் சாட்சியமளிக்கவில்லை என்றும், எதிரிக்கு எதிரான மாற்றுமுறையாவண சட்டத்தின் பிரிவு 138 க்கான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி போதுமான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கபட்டிருப்பதால் எதிரியை தண்டித்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று வாதிட்டார். புகார்தாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதத்திற்கு ஆதரவாகக் கீழ்கண்ட முன்தீர்ப்புரைகளை சுட்டிக்காட்டி வாதிட்டுள்ளார். 1.Rangappa Vs Mohan (AIR 2010 Supreme Court 1898), 2. ICDS Limited Vs Beena Shabeer (Crl.A.No.797/2022, dated 12.08.2002), 3. A.C. Narayanan Vs State of Maharashtra ( AIR 2014 Supreme Court 630).

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:23:26 +0530

8(ii). எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்துள்ளார். அதில் புகார்தாரர் அனுப்பிய சட்டஅறிவிப்பு குறைபாடுடைய சட்ட அறிவிப்பு என்பதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், பு.சா.1 ன் சாட்சியம் புகாருடன் முற்றிலும் முரண்பட்டிருப்பதாகவும், புகாரில் எதிரி கடன் வாங்கியதாக தெரிவித்த நிலையில் பு.சா.1 சாட்சியத்தில் எதிரியின் சகோதரி கடன் வாங்கியதாகவும், அதை திருப்பி செலுத்துவதாக எதிரி ஒத்துக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கில் எதிரியின் சகோதரி எதிரியாக சேர்க்காதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு காசோலைகள் எப்பொழுது புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை என்றும், பு.சா.1 இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார்தாரர் கொடுத்ததாக சொல்லும் பொது அதிகார பத்திரம் இல்லை என்பதனால் பு.சா.1 இவ்வழக்கினை நடத்த அல்லது சாட்சியமளிக்க அதிகாரம் இல்லை என்றும், பு.சா.1ன் சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றும், அடமான கடனுக்கு எதிராக மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், புகார்தாரர் தரப்பில் சட்டப்படியான கடன் அல்லது பொறுப்புறுதி எதிரிக்கு இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை என்றும், புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மூலம் எதிரிக்கு எதிரான மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரி தரப்பில் மாற்றுமுறையாவண சட்டத்தின் பிரிவு 139 ன் கீழான அனுமானம் மறுத்தளிக்கப்பட்டிருப்பதாகவும், புகார்தாரர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்படாதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய உத்திரவேண்டும் என வாதிட்டார். எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதத்திற்கு ஆதரவாகக் கீழ்கண்ட முன்தீர்ப்புரைகளை சுட்டிக்காட்டி வாதிட்டுள்ளார். 1. M/s. Team Sustain

M KALIMUTHUVEL
Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:32 +0530

Limited and others Vs M/s. Nordic India Solutions Private Limited, (Crl.O.P.No.22181/2019 and Crl.M.P.No.11498/2019, dated 15.12.2022), 2. Shri Monjoj Kumar Jain Vs Shri Mahendra Kumar Jain, Proprietor of M.R. Roller Flour Mill Limited, 3. K.Subramani Vs K.Damodara Naidu (2015) 1 Supreme court 99.

8(iii). புகார்தாரர் எதிரிக்கு எதிராக மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்து இருப்பதாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கினை நிரூபிக்க புகார்தாரரின் முகவர் பு.சா.1 ஆக விசாரணை செய்து பு.சா.ஆ.1 முதல் 10 சான்றாவணங்கள் தாக்கல் செய்துள்ளார்.

8(iv). பு.சா.1 சாட்சியத்தில் புகாரில் தெரிவித்த சங்கதிகளை ஒத்து முதன்மை விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். 27.08.2024 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் (பு.சா.ஆ.1) தாக்கல் செய்தும், புகார்தாரர் நிறுவனத்தில் கொடுத்த 02.11.2023 தேதியிட்ட கடன் ஏற்புறுதிக்கடிதம் (பு.சா.ஆ.2) தாக்கல் செய்தும், மேற்படி 11.06.2023 தேதியிட்ட புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.3) தாக்கல் செய்தும், 22.07.2022 தேதியிட்ட எதிரி புகார்தாரருக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் (பு.சா.ஆ.4) தாக்கல் செய்தும், 28.08.2024 தேதியிட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.5) தாக்கல் செய்தும், மேற்படி அறிவிப்பை எதிரி 31.08.2024 தேதியில் பெற்றுக்கொண்டதாகவும், அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை (பு.சா.ஆ.6) தாக்கல் செய்தும், மேற்படி எதிரி புகார்தாரருக்கு தரவேண்டிய தொகையை திரும்ப செலுத்தும் பொருட்டு, 18.09.2024 தேதியிட்ட காசோலை எண்கள் முறையே 000783, 000784 என்ற எண்கள் கொண்ட "ஐசிஐசிஐ பேங்க்", அடையார், சென்னை தொகை ரூ.30,00,000/-த்திற்கு கிளைக்குரிய காசோலைகள் (பு.சா.ஆ.7) தாக்கல் செய்தும், மேற்படி காசோலைகளை புகார்தாரரின் வங்கியான "ஆக்ஸிஸ் பேங்க்", சென்னை, திருமங்கலம் கிளையில்

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:23:36 +0530

18.09.2024 தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, அந்த காசோலைகளானது போதிய பணமில்லை என்ற காரணத்தினால் 19.09.2024 தேதியிட்ட திருப்பபட்ட குறிப்பாணைகள் (பு.சா.ஆ.8) மூலம் திருப்பபட்டதாகவும், அந்தக் குறிப்பாணைகள் தாக்கல் செய்தும், காசோலைகள் திருப்பபட்ட விவரத்தை 16.10.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு (பு.சா.ஆ.9) அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை (பு.சா.ஆ.9) தாக்கல் செய்தும், அந்த அறிவிப்பை எதிரி 23.10.2024 தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக தேடுதல் அறிக்கை (பு.சா.ஆ.10) தாக்கல் செய்தும், வழக்கு காசோலைகளுக்கான தொகைகளை எதிரி செலுத்தாதனால் எதிரி மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பதாகவும், எதிரியை தண்டிக்ககோரி இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

8(v). புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை மிக கவனமாக பரிசீலனை செய்து புகார்தாரர் வழக்கு காசோலைகளை உரிய காலத்திற்குள் வங்கியில் தாக்கல் செய்து, அந்த காசோலைகளை எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்தினால் பண பட்டுவாடா செய்யப்படாமல் திருப்பபட்டு அந்த விவரத்தை எதிரிக்கு உரிய காலத்தில் தெரிவித்து உரிய காலத்திற்குள் பணம் பட்டுவாடா செய்யபடாதனால் சரியான காலத்திற்குள் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. பு.சா.1 ன் சாட்சியம் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழான முதல்நோக்கு வழக்கு புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு எதிராக நிரூபிக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது.

8(vi). இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது கேட்கப்படும் முதல் கேள்வியில் காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல. தான் பணம் வாங்கவில்லை என்றும், இவ்வழக்கில் புகார்தாரர்

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:40 +0530

தரப்பு சாட்சியம் முடித்த பிறகு புகார்தாரர் தரப்பு சாட்சியம் எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து BNSS பிரிவு 351 (1) (ஆ) ன் கீழ் எதிரியிடம் வினவியபோது, எதிரி பொய்சாட்சியங்கள் என்றும், பணம் வாங்கவில்லை. அடமானத்திற்கு கூடுதல் பொறுப்புறுதிக்காகக் காசோலைகள் வாங்கப்பட்டது என பதிலளித்துள்ளார். எதிரி காசோலைகள் மற்றும் அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என ஒத்துக்கொண்டுள்ளார். இந்நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம், பிரிவுகள் 118(a) மற்றும் 139 ஆனது கீழ்கண்டவாறு தெரிவிக்கின்றன.

Sec-139 "Presumption in favour of holder.—It shall be presumed, unless the contrary is proved, that the holder of a cheque received the cheque of the nature referred to in section 138 for the discharge, in whole or in part, of any debt or other liability."

Sec -118'(a) of consideration —that every negotiable instrument was made or drawn for consideration, and that every such instrument, when it has been accepted, indorsed, negotiated or transferred, was accepted, indorsed, negotiated or transferred for consideration;"

எனவே, காசோலைகளில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்று மறுக்காததால் காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது என்று நீதிமன்றம் தீர்மானித்து எதிரி புகார்தாரருக்கு சட்டப்படியாகக் கொடுக்கவேண்டிய கடன் அல்லது பொறுப்புக்காகதான் வழக்கு காசோலைகள் வழங்கியுள்ளார் என்று மாற்றுமுறை ஆவணம் சட்டம், பிரிவுகள் 118(a) மற்றும் 139 ன் கீழ் இந்நீதிமன்றம் அனுமானங்கள் செய்துகொள்கிறது.

8(vii). ஆனால், மேற்படி அனுமானங்கள் எதிரியால் மறுத்தளிக்கக்கூடிய அனுமானங்கள் ஆகும். எதிரி மீதுள்ள மறுத்தளிக்கும் அனுமானங்களை எதிரி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. மாறாக, சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலைகளை முன்வைத்தாலே

M KALIMUTHUVEL
Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:45 +0530

போதுமானது ஆகும். வழக்கு காசோலைகளை குறித்து இந்நீதிமன்றம் புகார்தாரருக்கு ஆதரவாக செய்துள்ள அனுமானங்களை மறுத்தளிப்பதற்கு எதிரி தன் தரப்பில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. புகார்தாரர் தாக்கல் செய்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலேயே எதிரி தனது சாத்தியகூறுகளின் மேம்பட்ட நிலைகளை முன்வைக்க முடியும்.

8(viii). இது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Rangappa vs Sri Mohan (AIR 2010 SC 1898) என்ற வழக்கில், "reverse onus clauses usually impose an evidentiary burden and not a persuasive burden. Keeping this in view, it is a settled position that when an accused has to rebut the presumption under Section 139, the standard of proof for doing so is that of `preponderance of probabilities'. Therefore, if the accused is able to raise a probable defence which creates doubts about the existence of a legally enforceable debt or liability, the prosecution can fail. As clarified in the citations, the accused can rely on the materials submitted by the complainant in order to raise such a defence and it is conceivable that in some cases the accused may not need to adduce evidence of his/her own." என்று தெரிவித்துள்ளது.

8(ix). எதிரி தரப்பில் கீழ்கண்ட எதிர்வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு காசோலைகள் அடமானம் செய்யும்போது பொறுப்புறுதிக்காகக் கொடுத்ததாகவும், அந்தக் காசோலைகளை பயன்படுத்தி இந்த வழக்கு போடப்பட்டிருப்பதாகவும், புகார்தாரர் தரப்பில் சட்டப்படியான கடனிருப்பதை நிரூபிக்கப்படவில்லை என வாதிடப்பட்டுள்ளது. எதிரி தன் தரப்பு வழக்கினை நிரூபிக்க வாய்மொழி வாதத்தை தவிர வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

8(x). புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் ஆஜராக அவருடைய முகவருக்கு பு.சா.1 க்கு அளிக்கப்பட்ட பொது அதிகார ஆவணமாகும். இந்த ஆவணம் பதிவு

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:23:50 +0530

செய்யப்படாத நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் முன்னிலையில் எழுதப்பட்ட ஆவணமாகும். புகாரில் பு.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி இந்த வழக்கின் பொருண்மைகள் பு.சா.1 க்கு தெரியும் என்று விவரம் தெரிவிக்கப்படவில்லை. அதேபோன்று இவ்வழக்கில் பு.சா.1 புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும், பு.சா.ஆ.1 ஆவணம் சாட்சி புகார்தாரர் முகவருக்கு எழுதி கொடுத்ததாகவும், வழக்கு சங்கதிகள் பு.சா.1 க்கு தெரியும் என்ற விவரங்கள் குறிப்பிடபடவில்லை.

8(xi). பு.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> "பு.சாஆ.1 ஆவணத்தில் என்னுடைய முதல்வருக்காக ராஜமாணிக்கத்தின் மீது வழக்கு போடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு தெரிவிக்கப்படவில்லை. எனக்கு முதல்வர் வழங்கிய பொது அதிகாரம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட ஆவணமாகும். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல்வர் எனக்கு வழங்கிய பொது அதிகார பத்திரம் USA லிருந்து Adjudicate செய்து எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொது அதிகார பத்திரம் என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார்.
> **(25.03.2026 தேதியன்று நடைபெற்ற குறுக்கு விசாரணையின் போது 1 வது மற்றும் 2 வது பக்கத்தில் 2 வது பத்தியில் 5 வது வரியிலிருந்து பத்தி முழுவதும்)**

மேற்படி பு.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தின் படி இவ்வழக்கில் உள்ள பு.சா.ஆ.1 ஆவணம் புகார்தாரர் எதிரிக்கு கொடுத்த ஆவணம் இல்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் யூஎஸ்ஏவில் Adjudicate செய்து கொடுத்த பொது அதிகார ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, பு.சா.1 புகார்தாரரின் அதிகாரம் அளித்த பொது அதிகார பத்திரம் தாக்கல் செய்யப்படாமல் இந்த வழக்கு தாக்கல்

M KALIMUTHUVEL
Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:23:56 +0530

செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. இவ்வழக்கினை நடத்த பு.சா.1க்கு இந்த விதமான அதிகாரமும் புகார்தாரர் வழங்கவில்லை. அதனால் புகார்தாரர் சார்பாக பு.சா.1 இவ்வழக்கில் ஆஜராகி நடத்த அல்லது சாட்சியமளிக்க எந்த விதமான அதிகாரமும் பு.சா.1 க்கு இல்லாத நிலையில் அவர் அளித்த சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே, புகார்தாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க எந்தவிதமான சாட்சியமும் இவ்வழக்கில் இல்லை என்பது தெரியவருகிறது.

8(xii). இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.சா.ஆ.2 ஆவணம் 02.11.2023 தேதியிட்ட எதிரி புகார்தாரருக்கு அனுப்பி வைத்த கடிதமாகும். இதில் புகார்தாரருக்கு அவருடைய சகோதரி செலுத்தவேண்டிய கடனை 2024 ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதிக்குள் ஒரு தவணையாகவோ அல்லது இரண்டு தவணைகளில் தவறாமல் செலுத்திவிடுவதாகவும், புகார்தாரரிடம் பெறப்பட்ட ரூ.4 லட்சத்தை நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திற்குள் திருப்பி செலுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பு.சா.ஆ.2 ஆவணத்தில் எவ்வளவு தொகை எதிரியின் சகோதரி புகார்தாரருக்கு தரவேண்டும் என்ற விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

8(xiii). பு.சா.ஆ.3 புகார்தாரர் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பாகும். அதில் புகார்தாரருக்கு எதிரி 22.07.2022 மற்றும் 25.07.2022 ஆகிய இரு தேதிகளில் இரண்டு பதிவு செய்யப்பட்ட அடமான ஆவணங்கள் முறையே ரூ.40 லட்சம் மற்றும் ரூ.50 லட்சத்தை புகார்தாரரிடமிருந்து எதிரி பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்ததாகவும், அந்தத்தொகைக்கு ரூ.100க்கு ரூ.1 சதவீத வட்டி செலுத்தவேண்டும் என்றும், இந்த வட்டித்தொகையை ஒவ்வொரு மாதமும் 10 ம் தேதிக்குள் திருப்பி செலுத்தவேண்டும் என்றும், அதன்படி ஒரு

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:24:00 +0530

வருடம் நான்கு மாதங்களுக்கான வட்டித் தொகையை எதிரி செலுத்தவில்லை என்றும், அடமான ஆவணங்களில் 4 வது சரத்தில் ஒத்துக்கொண்டவாறு வட்டி செலுத்தும் தவறும்பட்சத்தில் அடமான சொத்துக்களில் விற்பனை செய்ய அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகவும், எனவே, அசல் தொகை மற்றும் வட்டித்தொகையை 15 நாட்களுக்குள் புகார்தாரருக்கு செலுத்தவேண்டும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

8(xiv). இவ்வழக்கில் பு.சா.ஆ.4 புகார்தாரருக்கு எதிரி எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரங்களின் உண்மை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் புகார்தாரரிடம் எதிரி ரூ.40 லட்சத்தையும் மற்றும் ரூ.50 லட்சத்தையும் கடனாக நேரடியாக புகார்தாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8(xv). பு.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> "பு.சா.ஆ.4 ஆவணங்களில் 22.07.2022 தேதியிட்ட அடமானப்பத்திரத்தில் பொன்னுசாமி எதிரி ராஜமாணிக்கத்திற்கு ரூ.40 லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். ரூ.40 லட்சம் எதிரிக்கு கொடுக்கவில்லை. அவருடைய சகோதரிக்கு தான் கொடுத்தேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.4 ஆவணங்களில் 25.07.2022 தேதியிட்ட அடமானபத்திரத்தில் பொன்னுசாமி எதிரிக்கு ரூ.50 லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அந்தத் தொகையும் எதிரியின் சகோதரிக்கு கொடுத்தத் தொகை என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார்.
> **(25.03.2026 தேதியன்று நடைபெற்ற குறுக்கு விசாரணையின் போது 2 வது பக்கத்தில் 4 வது பத்தியில் 1 வது வரியிலிருந்து 7 வது வரிகள் வரை)**

மேற்படி பு.சா.1 சாட்சியத்தின் படி எதிரிக்கு புகார்தாரர் பணம் எதுவும் கொடுக்கவில்லை. அவருடைய சகோதரிக்கு தான் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இது புகார்தாரர் வழக்குடன் முற்றிலும் முரண்பட்டிருக்கிறது தெரியவருகிறது.

M
KALIMUTHUVEL
Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:24:05 +0530

8(xvi). இவ்வழக்கில் பு.சா.ஆ.5, 28.08.2024 தேதியிட்ட சட்ட அறிவிப்பு புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், அதில் 02.11.2023 தேதியிட்ட கடிதத்தின் படி அடையார் கிளை, ஐசிஐசிஐ வங்கி காசோலைகள் எண்கள். 000780 முதல் 000785 வரையான 6 காசோலைகளை தலா ரூ.15 லட்சம் மதிப்பிற்கு வழங்கியதாகவும், அந்த கடிதத்தின்படி 2024 ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அந்தக் காசோலைகளுக்கான பணத்தை செலுத்துவதாக தெரிவித்தனால், மேற்படி காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8(xvii). பு.சா.ஆ.5 ஆவணத்தில் காசோலைகள் 02.11.2023 தேதியிட்ட கடிதத்தின்படி கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், காசோலைகளை பற்றிய விவரங்கள் பு.சா.ஆ.2 கடிதத்தில் தெரிவிக்கப்படவில்லை. புகார்தாரர் தெரிவிப்பதை போல காசோலைகளை எதிரி 02.11.2023 தேதியிட்ட கடிதத்தின்படி கொடுத்திருந்தால் எதிரி அந்த கடிதத்தில் காசோலைகளின் விவரங்களை தெரிவித்திருக்கவேண்டும். அவ்வாறு தெரிவிக்காமல் இருப்பது இந்த வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் புகார்தாரர் புகாரில் வழக்கு காசோலைகள் எதிரி புகார்தாரருக்கு எப்பொழுது கொடுத்தார் என்ற விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக, 02.11.2023 தேதியிட்ட கடிதத்தின் படி வழங்கியதாக மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு காசோலைகள் இரண்டும் 18.09.2024 தேதியிட்டவையாகும். புகார்தாரருக்கு 02.11.2023 தேதியிட்ட கடிதத்தின் படி எதிரி அனுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக்கடிதம் அனுப்பியபிறகு சுமார் 11 மாதங்களுக்கு பிறகு காசோலைகளுக்கான தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் தரப்பில் எந்த ஒரு விளக்கமும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கு காசேலைகளை அடமான கடனுக்கு எதிரியால் எதற்காக,

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:24:11 +0530

எப்பொழுது வழங்கப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை.

8(xviii). வழக்கு காசோலைகள் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு பணம் மறுக்கப்பட்டதனால் 16.10.2024 தேதியிட்ட சட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.9) எதிரிக்கு அனுப்பபட்டுள்ளது. பு.சா.ஆ.9 ல் காசோலைகள் எப்போழுது புகார்தாரருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. மாறாக, 02.11.2023 தேதியிட்ட கடிதத்தில் ஒத்துக்கொண்டவாறு காசோலைகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8(xix). இவ்வழக்கில் புகார்தாரர் பெயருக்கு எதிரி பதிவு செய்யப்பட்ட அடமானம் ஆவணங்கள் (பு.சா.ஆ.4) புகார்தாரரிடம் பெறப்பட்ட கடன்களுக்கு ஈடாக எழுதி கொடுக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது. இந்நிலையில் புகார்தாரரிடம் வழக்கு காசோலைகள் எதிரி கொடுக்கவேண்டிய அவசியம் என்ன என்பதனை எதிரி புகார்தாரர் தரப்பில் சட்ட அறிவிப்பிலோ அல்லது புகாரிலோ அல்லது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் தெரிவிக்கப்படவில்லை. மேலும், புகார்தாரரிடமிருந்து எதிரி பெறப்பட்ட கடன்களுக்கு ஈடாக அடமானப்பத்திரங்கள் எழுதிகொடுக்கப்பட்ட நிலையில் எதிரி அடமானம் ஆவணங்களில் ஒத்துக்கொண்டுள்ளவாறு அசல் அல்லது வட்டியை திருப்பி செலுத்தவில்லை என்றால் அடமானம் சொத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு கடனை வசூலிக்கவேண்டும். மேலும், அந்த அடமானம் இன்றைய தேதி வரை நிலுவையில் உள்ளது. இந்நிலையில் புகார்தாரருக்கு எதிரி அந்தக் கடன்களுக்காகக் காசோலைகள் வழங்கியதாக சொல்வதை புகார்தாரர் தரப்பில் எந்த ஒரு சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. ஆனால், எதிரி தரப்பில் வழக்கு காசோலைகள் அடமானம் பத்திரங்கள் எழுதி கொடுத்தபோது பொறுப்புறுதிக்காக வாங்கிகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கு காசோலைகள் அடமானபத்திரங்கள் எழுதிகொடுத்தபோது பொறுப்புறுதிக்காக

M KALIMUTHUVEL
Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:24:16 +0530

பெறப்பட்டதை புகார்தாரர் எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்து அடமான கடன்களை திரும்பப் பெறுவதற்கு வழக்கு காசோலைகளை தவறுதலாக பயன்படுத்தியிருக்கலாமோ என்ற சந்தேகம் இவ்வழக்கில் ஏற்படுகிறது.

8(xx). இந்நிலையில் கீழ்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்புரையை சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகிறது.

1. M. Senthil Nathan Vs K.Saravanan (Crl.A.No.836/2012, dated 18.03.2025) என்ற வழக்கில் – The attempt of the complainant in converting a civil dispute into a criminal case invoking section 138 of N.I.Act, 1881 where the citizen of this country had to undergo sentence of imprisonment affecting his freedom cannot be treated lightly. The complainant instead of resorting to civil remedy against the mortgage had sought criminal action without resorting to civil remedy. Therefore, the finding of the trial court need not be interfered with particularly as against an order of acquittal. The appeal court will be slow in reversing the finding of the trial court rendering an order of acquittal.

மேற்படி வழக்கின் பொருண்மைகள் இவ்வழக்கின் பொருண்மைகளுடன் பொருந்துகிறது. எனவே, புகார்தாரர் கொடுத்த கடனுக்கு பதிவு செய்யப்பட்ட அடமானம் இன்றுவரை நிலுவையில் இருக்கும்போது புகார்தாரர் அடமான சொத்தின் மீது நடவடிக்கை எடுத்து கடன் தொகையை வசூலித்திருக்கவேண்டும். அவ்வாறு வசூலிக்காமல் உரிமையியல் வழக்கினை குற்றவியல் வழக்காக மாற்ற முயற்சி செய்திருப்பது தெளிவாக தெரியவருகிறது. எனவே, அடமான கடனை வசூலிப்பதற்கு மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் காசோலைகள் வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

M KALIMUTHUVEL

Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:24:22 +0530

8(xxi). இவ்வழக்கில் புகார்தாரருக்கு மாற்றுமுறையாவண சட்டத்தின் கீழான அனுமானங்கள் ஆதரவாக இருந்தாலும், புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளது. புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியம் மூலம் எதிரி மாற்றமுறையாவண சட்டத்தின் அனுமானங்களை மறுத்தளித்திருப்பது தெரியவருகிறது. மேலும், புகார்தாரர் தரப்பு வழக்கு மற்றும் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பது புகார்தாரர் தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, புகார்தாரர் தரப்பு வழக்கு நம்பத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8(xxii). எனவே, மேலே தீர்மானித்தவாறு இவ்வழக்கில் அனுப்பபட்ட சட்ட அறிவிப்பு முறையான சட்ட அறிவிப்பு அல்ல என்பதனாலும், இவ்வழக்கில் புகார்தாரர் முகவருக்கு சரியான அதிகாரமளிக்கப்படாதனால் இவ்வழக்கை நடத்த முகவருக்கு அதிகாரமில்லை என்பதனாலும், அடமான கடன்களை வசூலிக்க மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் காசோலை மோசடி வழக்கு எதிரிக்கு எதிராக நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு கண்டு புகார்தாரர், எதிரி மீதான குற்றச்சாட்டை தகுந்த ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8(xxiii). எனவே, புகார்தாரர் எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் மாற்றுமுறை ஆவணம் சட்டம் 138 ன் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து உத்திரவிட தீர்மானிக்கிறது.

**9.இறுதியாக**

எதிரி மாற்றுமுறை ஆவணம் சட்டம் 138 ன் கீழ் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து BNSS பிரிவு 278(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது.

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL
Date: 2026.07.10 17:24:26 +0530

//என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்து-தட்டச்சர் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.//

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:24:32 +0530

25 வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர், சென்னை.

**1. புகார்தாரர் தரப்பு சாட்சி:-**

1) திரு.நடராஜன் (புகார்தாரர்)

**2. புகார்தாரர் தரப்பு சான்றாவணம்:-**

| வரிசை எண் | சான்றாவணம் வரிசை | தேதி | ஆவணம் |
|---|---|---|---|
| 1. | பு.சா.ஆ.1 | 27.08.2024 | பொது அதிகார பத்திரம் |
| 2. | பு.சா.ஆ.2 | 02.11.2023 | ஏற்புறுதிக்கடிதம் |
| 3. | பு.சா.ஆ.3 | 11.06.2023 | சட்ட அறிவிப்பு |
| 4. | பு.சா.ஆ.4 | 22.07.2022 மற்றும் 25.07.2022 | அடமான பத்திரங்கள் |
| 5. | பு.சா.ஆ.5 | 28.08.2024 | அறிவிப்பு |
| 6. | பு.சா.ஆ.6 | 31.08.2024 | அஞ்சலக ஒப்புகை அட்டை |
| 7. | பு.சா.ஆ.7 | 18.09.2024 | ரூ.30,00,000/-த்திற்கு "ஐசிஐசிஐ பேங்க்", அடையாறு கிளைக்குரிய காசோலைகள் எண்கள்.000783, 000784. |
| 8. | பு.சா.ஆ.8 | 19.09.2024 | திருப்புதல் குறிப்பாணைகள் |

| | | | |
|---|---|---|---|
| 9. | பு.சா.ஆ.9 | 16.10.2024 | சட்ட அறிவிப்பு |
| 10. | பு.சா.ஆ.10 | 23.10.2024 | அஞ்சலக தேடுதல் அறிக்கை |

**3. சான்று பொருள்:–** இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சி:–** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL Date: 2026.07.10 17:24:38 +0530

25 வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர், சென்னை–08.